**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-06032022-4625

Volume: 6

Issue: 3

Month: January

Year: 2022

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 22.10.2021

Accepted: 15.12.2021

Published: 01.01.2022

Citation:
Kavitha, J. "Kambaramayanathil Meipadugal." *Shanlax International Journal of Tamil Research,* vol. 6, no. 3, 2022, pp. 66–75.

DOI:
https://doi.org/10.34293/tamil.v6i3.4625

*Corresponding Author:
jkavitha@psgrkcw.ac.in

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Kambaramayanathil Meipadugal

**Dr. J. Kavitha**
*Assistant Professor, Department of Tamil*
*PSGR Krishnammal College For Women, Coimbatore, Tamil Nadu, India*

**Abstract -** One of the most special thing in the tamil literature is the facts principle .Originated from dramas and the way travelled through literature.Thamilannal says,"The internal and external tamil literature contains the characteristics of dramas".According to the changes and the development in the society, fact principle can be explained or expressed through emotions."Kaninum seviyinum" the lines written by Thamilanal explains us that ,the person who understands only the meaning of the words, cant understand the meaning of the real facts.Inorder to understand that , a person should see, hear, feel, express with the help of their eyes and ears.We can see the facts principle of Tholkaapiyar, directly in Kambar.Tholkaapiyar also explains us the reason for the creation of facts principle. Kambar will explain us the expressions and feelings of the characters of the story .We can understand the condition of occurrence of many facts principle in a single time through Kambar's poems and Tholakaapiyar's eight types of facts principle.

**Keywords:** Kambaramayanam, Meipadu, Tholkaapiyam, Tholkaapiyar, Thamilannal, Emotions, Kambar.

**References**

1. Elapooranar. 2007. *Tholpakkam-Metaphysics*, Parables, Cheyyal, Genetics, Chennai, Corporation Publication.
2. Dr. Sethupillai, R.V. 2004. *Kambarkavi Anandam*, Vol. 2, Rajapalayam.
3. Tamil Annal-Tholpakkam. *Source and Commentary*, Thanap pamudali Street, Madurai Meenakshi Book Centre, Mayuracampus 48,
4. Acharya, B.S Valmiki Ramayana (Whole), New Book World, Chennai, Narmada Publishing,
5. GopalakrishnaMachriya, Y.M. 1957. *Kambaramayana*, Chennai, Nangavati Third Edition,

# கம்பராமாயணத்தில் மெய்ப்பாடுகள்

***முனைவர் ஜெ. கவிதா***
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
பூசாகோஅர கிருஷ்ணம்மாள் மகளிர் கல்லூரி, கோவை

***ஆய்வுச் சுருக்கம்***
*தமிழ் இலக்கியத்தில் சிறப்பு வாய்ந்த மெய்பாடுக் கோட்பாடு நாடகங்களில் இருந்து உருவானதும், இலக்கியத்தின் வழி பயணித்த வழியும் ஆகும். தொல்காப்பியரின் மெய்ப்பாட்டுக் கோட்பாட்டைக் கம்பராமாயணத்தில் பொருத்திக் காணலாம். கம்பராமாயணக் கதையில் இடம் பெற்றுள்ள பாத்திரங்களின் வெளிப்பாடுகள், உணர்வுகளை மெய்பாடுகள் கோட்பாடு அடிப்படையில் ஆராய்ந்திடும் போக்கு மேற்கொள்ளப்பட்டுள்ளது.*
***முக்கியச்சொற்கள்:*** *கம்பராமாயணம், மெய்பாடு, தொல்காப்பியம், தொல்காப்பியர், தமிழண்ணல், உணர்வுகள், கம்பர்*

## முன்னுரை

தமிழ் இலக்கியங்களின் தனிச் சிறப்புகளுள் மெய்ப்பாட்டுக் கொள்கையும் ஒன்றாகும். நாடகத்தில் தோன்றிய இப்பண்பு, அதன் வழி தோன்றிய இலக்கியத்திலும் தானே பதிந்தது என்பது ஏற்புடையதாகும். தமிழில் அக இலக்கியமும், புற இலக்கியமும் நாடகப் பண்புடையன என்கிறார் தமிழண்ணல். சமூக உறவுகளின் தாக்கத்தாலும், மாற்றத்தாலும், மனிதர்களிடையேத் தோன்றும் உணர்வு வேறுபாடுகள் உலகோர் அறிந்துகொள்ளும் வண்ணம் உடல் உறுப்புக்களால் வெளிப்படுத்திக் காட்டுவது மெய்ப்பாடாகும்.

> **கண்ணினும் செவியினும் திண்ணிதின் உணரும்**
> **உணர்வுடை மாந்தர்க்கு அல்லது தெரியின்**
> **நன்னயப் பொருள்கோள் எண்ணருங்குரைத்தே**
> ***(தொல்-மெய்ப்.30)***

என்ற நூற்பாவிற்கு விளக்கம் தரும் தமிழண்ணல் சொற்பொருள் மட்டும் அறிந்தார்க்கு மெய்ப்பாடு தோன்றாது. கண்ணாலும், செவியாலும் ஏனைய புலன்களாலும் கண்டு, கேட்டு, உண்டு, உற்று, அறிந்த பழக்கம் உடையவர்க்கே பாடலிலுள்ள பொருளும் மெய்ப்பாடாகத் தோன்றும் என்கிறார்.

## மெய்ப்பாடு - பகுப்பு

தொல்காப்பியர் கூறும் மெய்ப்பாடுகளை உரையாசிரியர்கள், அகத்திற்குரியவை என்றும், அகத்திற்கும் புறத்திற்கும் பொது வானவை என்றும் வகைப்படுத்தியுள்ளனர். அகத்திற்குரியவற்றைக் களவுக்குரியது, கற்புக்குரியது, இரண்டிற்கும் பொதுவானது என வகைப்படுத்துகின்றனர். இவ்வகைகளுக்கு ஏற்ப கம்பர் தம் காப்பியத்தில் மெய்ப்பாடுகளைச் சிறப்புற அமைத்திருக்கிறார்.

## அக - மெய்ப்பாடுகள் - களவுக்குரியவை

இராமன், சீதை ஆகியோரின் களவுக் காதலில் களவு ஒழுக்கத்திற்குரிய மெய்ப்பாடுகளைக் காண முடிகின்றது.திருமணத்திற்குப் பின் இவர்களது கற்பு வாழ்விலும், காப்பியத்தின் பல இடங்களில் கற்பிற்குரிய மெய்ப்பாடுகளைக் காண முடிகின்றது.

**வேட்கை ஒருதலை உள்ளுதல் மெலிதல்**
**ஆக்கஞ் செப்பல் நாணுவரை இறத்தல்**
**நோக்குவ எல்லாம் அவையே போறல்**
**மறத்தல் மயக்கம் சாக்காடு என்றுஅச்**
**சிறப்புடை மரபினவை களவென மொழிப**
**(தொல்-களவு-9)**

என்று களவில் நிகழும் மெய்ப்பாடுகளைத் தொல்காப்பியர் குறிப்பிடுகின்றார்.

**ஒருதலையுள்ளல்**

உள்ளப் புணர்ச்சியின் பின் இராமன் முனிவரோடு சென்றுவிடச் சீதை காதல் நோயால் துன்புறுகிறாள். இராமனை அடைய வேண்டும் என்ற வேட்கையால் அவனையே நினைத்து ஓவியப் பாவை போலானாள் எனவும், இராமனது உடலையும், நிறத்தையும், உறுப்புகளையும் வியந்து பேசுகிறாள் எனவும் கம்பர் குறிப்பிடும்,

**அந்தம் இல்நோக்கு இமைஅணை கிலாமையால்,**
**பைந்தொடி ஓவியப் பாவை போன்றனள்;**
**(கம்ப-518)**

**கன்றிய மனத்து உறுகாம வேட்கையால்,**
**ஒன்று அல, பல நினைந்து உருகும்.**
**(கம்ப-539)**

பகுதிகள் ஒரு தலையுள்ளல் எனும் மெய்ப்பாடாக அமைந்துள்ளன.

**ஆக்கம் செப்பல்**

மாலையிலும், இரவிலும் சீதை அடைந்த பிரிவுத் துயரைக் கம்பர் பல பாடல்களில் விளக்குகிறார். இராமனது நிலையைக் கூறும்போது அவன் விடியும்வரை உறங்காது துன்புற்றாள் என்பதை,

**....... ........... ............. கங்குலும் திங்களும்**
**தனியும், தானும், அத்தையலும் ஆயினான்.**
**(கம்ப-618)**

என்ற பாடலின் மூலம் விளக்குகிறார். ஆக்கம் செப்பல் என்பதற்கு இளம்பூரணர், “உறங்காமையும் உறுவ ஓதலும் முதலாயின் கூறுதல்” என விளக்கம் தருவதை இராமன் செயலோடு பொருந்திக் காணும்பொழுது அது ஆக்கம் செப்பல் எனும் மெய்ப்பாடாக அமைந்துள்ளது.

**நோக்குவ எல்லாம் அவையே போறல்**

சீதையைப் பிரிந்த இராமனுக்குப் பார்க்கும் பொருள் எல்லாம் அவளாகவே தோற்றம் தந்தன எனவும், சீதை கடல், மழை, காயா குவளை, ஆகியவற்றைக் கண்டபோதெல்லாம் இராமனின் உடல் வண்ணத்தை அவற்றில் கண்டு துன்புறுகிறாள் எனவும் கம்பர் குறிப்பிடும்,

**தெருள் இலா உலகில் சென்று நின்று வாழ்**
**பொருள் எலாம், அவள் பொன்உரு ஆயவே!**
**(கம்ப-621)**

இப்பாடலில் நோக்குவ எல்லாம் அவையே போறல் என்ற மெய்ப்பாடு அமைந்துள்ளது.

**மெலிதலும் மயக்கமும்**

காதல் நோய் சீதையின் உடலெங்கும் பரவிப் படர்ந்தது. அதனை வெளியில் சொல்ல முடியாதவளாக உடல் மெலிகின்றாள். இந்நிலையைக் கம்பர்,

**நோம்; உறும் நோய்நிலை நுவலகிற்றிலள்;**
**ஊமரின், மனத்திடை உன்னி, விம்முவாள்;**
**(கம்ப-521)**

என்று விவரித்துள்ளார்.

இப்பாடலில் மெலிதல் என்ற மெய்ப்பாடும், செய்வதறியாது பறவைகளோடும், விலங்குகளோடும் தன் நிலையைச் சொல்லிப் புலம்பும்,

**அளியென் செய்த தீவினையோ!அன்றில் ஆகிவந்தாயோ?**
**(கம்ப-547)**

என்ற இப்பாடலில் மயக்கம் என்ற மெய்ப்பாடும் அமைந்திருப்பதைக் காண முடிகின்றது. களவுக்குரிய வேட்கை முதலான ஒன்பது மெய்ப்பாடுகளோடு காட்சியையும்

சேர்த்துப் பத்தாகக் கூறுகின்றார் இளம்பூரணர். காதல் நோயுற்ற இராவணன்,

**பாயிரம் உணர்ந்த நூலோர் - காமததுப் பகுத்தபத்தி**
**ஆயிரம் அல்லபோன - ஐ இரண்டு என்பர் பொய்யே.**

***(கம்ப-7645)***

எனக் கூறுவதாகக் குறிப்பிடும் கம்பர், தொல்காப்பியரின் மெய்ப்பாட்டுக் கொள்கையைத் தெளிவுபடுத்துகின்றார். மெய்ப்பாடுகளுக்கெனத் தனி இயல் வகுத்த தொல்காப்பியர் களவுக்குரிய வேட்கை முதலானவற்றை மெய்ப்பாட்டியலில் கூறாது களவியலில் கூறுகின்றார். கம்பரும் இராமன் சீதை ஆகியோரது உள்ளப் புணர்ச்சிக்குப் பின் வேட்கை முதலான மெய்ப்பாடுகளைக் கூறிப் பின் கதை நிகழ்ச்சிகளைக் கூறுகின்றார்' என்பர் மா.சுசீலா. இக்கருத்து தொல்காப்பியரின் மெய்ப்பாட்டுக் கொள்கைகளைக் கம்பர் நுட்பமாக பின்பற்றியுள்ளார் என்பதை உறுதி செய்கின்றது.

### களவுக்கும் - கற்புக்கும் உரியவை

களவு, கற்பு இரண்டினுக்கும் பொதுவானவைகளும் கற்பிற்கு உரியவையுமான மெய்ப்பாடுகளாகத் தொல்காப்பியர் குறிப்பனவற்றுள் பல கம்பனில் இடம் பெற்றுள்ளன.

### புகு முகம் புரிதல்

புகு முகம் புரிதல் என்பதற்குப் பேராசிரியர், "ஒருவனும் ஒருத்தியும் எதிர்பட்ட வழித் தன்னை அவன் நோக்குதற் கண் விரும்பும் உள்ள நிகழ்ச்சி" என விளக்கம் தருகின்றார். இவ்விளக்கத்திற்கேற்ப தனியே நின்ற இராமனை மறைந்து நின்று பார்த்துக் காதலுற்ற சூர்ப்பனகை அழகிய வேடம் கொண்டு அவன் காணும்படி முன்வந்து நின்றாள் என்பதைக் கம்பர்,

**செவ்வி முகம் முன்னி, அடி செங்கையின் இறைஞ்சா,**
**வெவ்விய நெடுங்கண் - அயல்வீசி அயல்பாரா,**
**நவ்வியின் ஒதுங்கி, இறைநாணி, அயல் நின்றாள்.**

***(கம்ப-2768)***

எனக் குறிப்பிடுகின்றார். இதனைப் புதுமுகம் புரிதல் எனும் மெய்ப்பாடாகக் கொள்ளலாம்.

### அணிந்தவை திருத்தல்

இராமனைக் கண்டு காதலுற்ற சீதை ஐயுறுகின்றாள். நீலமாலை இராமனின் தோற்றப் பொலிவைச் சீதையிடம் உரைத்த பின்பு ஐயம் நீங்குகிறாள். கோலங் கொண்ட சீதை இராமனை நேராக நோக்காது,

**கைவளை திருத்துபு கடைக்கணின் உணர்ந்தாள்**

***(கம்ப-1153)***

எனக் குறிப்பிடும் பகுதி, அணிந்தவை திருத்தல் எனும் மெய்ப்பாடாகும்.

### புலம்பித் தோன்றல்

உடலின் வெம்மை தீரச்சாந்தாலும், புவாலும் புனைந்தபொழுதும் உடல் வாடி நிற்கும் சீதையின் நிலையைப் புறஞ்செயச் சிதைதல் (529) என்ற மெய்ப்பாடாகவும், தாதியர், சேடியர், செவிலியர் சூழ இருந்தாலும் உள்ளத்தால் தனிமைப்பட்டு இராமனை எண்ணிச் சோர்வுறும் சீதையின் செயலை,

**கன்றிய மனத்து உறுகாம வேட்கையால்,**
**ஒன்று அல, பலநினைந்து, உருகும் காலையே,**

எனக் குறிப்பிடும் கம்பர் புலம்பித் தோன்றல் என்ற மெய்ப்பாடாகவும் சுட்டுகின்றார்.

### இன்பத்தை வெறுத்தல்

பிரிவால் வாடும் இராமனும், சீதையும் நிலவை வெறுக்கின்ற செயலும், இராவணனைக் காணாத அவனுடைய உரிமை மகளிர்க்கு இனிய இசை தேள் கொட்டுவது போல் இருந்ததாகக் கம்பர்,

**....... .............. ......... ........... கற்பக வல்லியர்**
**தேளினால், திகைப்பு எய்துகின்றார் சிலர்.**

***(கம்ப-5010)***

எனக் குறிப்பிடும் பகுதியும் இன்பத்தை வெறுத்தல் எனும் மெய்ப்பாடாக அமைந்துள்ளன.

### துன்பத்துப் புலம்பல்

இராமன் சீதையின் நினைவால் இயற்கைக் காட்சிகளைக் கண்டு புலம்புவதும், கார் காலத்தில் முகில், முல்லை ஆகியவற்றைக் கண்டு புலம்புவதும், சிறையிருந்த சீதை, இராமன் நினைவால்,

**கருமேகம், நெடுங்கடல், கா, அனையான்**
**தருமே, தனியேன் எனது ஆர்உயிர்தான்?**

**(கம்ப-5230)**

எனப் புலம்புவதாக அமைந்த இப்பகுதியும் துன்பத்துப் புலம்பல் எனும் மெய்ப்பாடாக அமைந்துள்ளது.

### கண்துயில் மறுத்தல்

அசோக வனத்தில் சிறையிருக்கும் சீதை மழைத்துளி பெறாத மருந்துச் செடியைப் போலவும், புகையுண்ட ஓவியம் போலவும் வாடியதோடு உறங்குவதையும் மறந்தாள் என்பதை,

**துயில்எனக் கண்கள் இமைத்தலும் முகிழ்த்தலும் துறந்தாள்;**
**வெயிலிடைத் தந்தவிளக்கு எனஒளி இலா மெய்யாள்**

**(கம்ப-5072)**

எனக் குறிப்பிடுவது கண்துயில் மறுத்தல் மெய்ப்பாடாகும்.

### ஐயம் செய்தல்

இராமன் தன்னை "அறிவு இல்லாதவள், அரக்கர்கள் தின்று முடித்திருப்பர்" என்றெல்லாம் முடிவு செய்திருப்பானோ, அன்னையரும் தம்பியரும் மீண்டும் வந்து அயோத்திக்கே அழைத்துச் சென்று விட்டனரோ எனப் பலவாறு எண்ணி அசோகவனத்தில் சீதை துன்புறுவதாகக் கூறும்

**என்னை, நாயகன், இளவலை எண்ணலா வினையேன்**
**சொன்ன வார்த்தை கேட்டு அறிவு இலள் எனத்துறந்தானோ?**

**(கம்ப-5082)**

**பெற்ற தாயாரும், தம்பியும், பெயர்த்தும் வந்துஎய்தி,**
**கொற்ற மாநகர்க் கொண்டு இறந்தார்களோ**

**(கம்ப-5085)**

இப்பாடல்கள் ஐயம் செய்தல் எனும் மெய்ப்பாட்டை நினைவுபடுத்துகின்றன.

### மறைந்தவை உரைத்தல்

கற்பு வாழ்க்கையில் தலைவி களவுக்கால நிகழ்வுகளை நினைவு கூர்ந்து மகிழும் செய்தியை சங்கப் பாடல்களில் காண முடிகின்றது. இராமனைப் பிரிந்து வாடும் சீதை அசோகவனத்தில் களவுக்கால நிகழ்ச்சிகளை நினைவு கொள்கிறாள்.

**கன்னல் மூன்றில், களப்பட, கால்வளை**
**வில்நலம் புகழ்ந்து, ஏங்கி வெதும்புவளாள்**

**(கம்ப-5090)**

என இராமனுடைய தோள்களையும், திருமண நிகழ்ச்சியில் தருப்பையில் கால் வைத்த அழகையும் நினைத்துப் பார்க்கும் பகுதிகள் மறைந்தவை உரைத்தல் என்ற மெய்ப்பாடாக அமைந்துள்ளன.

### புறஞ்சொல் மாணாக்கிளவி

தலைவி, தலைவனுக்குப் பழி நேராமல் காக்கும் செயல் புறஞ்சொல் மாணாக்கிளவி எனும் மெய்ப்பாடாகும். சீதை, இராவணனிடம்,

**எல்லை நீத்த உலகங்கள் யாவும், என்**
**சொல்லினால் சுடுவேன்; அது தூயவன்**
**வில்லின் ஆற்றற்கு மாசு என்று, வீசினேன்**

**(கம்ப-5362)**

எனக் கூறுவதை இம்மெய்ப்பாடாகக் கருதலாம். உடம்பு நனி கருங்கல், அவன் தமர் உவர்த்தல், அறனளித்துரைத்தல் ஆகிய மெய்ப்பாடுகளும் கம்பனில் இடம் பெற்றுள்ளன.

சங்க இலக்கியங்களில் அகத்திணைக்கான கூடலில் மகிழ்வும், பிரிவில் அழுகையுமான மெய்ப்பாடுகள் தலைவியிடமே தோன்றுவதாகக் கூறப்படுகின்றன. ஆனால், கம்பர் ஆடவர், மகளிர் இருவரது மெய்ப்பாடுகளையும் பாடியுள்ளார் என்ற மா.சுசீலாவின் கருத்து நினைத்தற்குரியது.

**எண்வகை மெய்ப்பாடுகளும் – களங்களும்**

அகத்திணைக்கென மெய்ப்பாடுகளைக் கூறிய தொல்காப்பியர் அகம், புறம் இரண்டிற்கும் பொதுவான மெய்ப்பாடு களையும் கூறுகின்றார்.

**நகையே அழுகை இளிவரல் மருட்கை**
**அச்சம் பெருமிதம் வெகுளி உவகையென்று**
**அப்பால் எட்டே மெய்ப்பாடென்ப**

**(தொல்-மெய்ப்.3)**

எனக் கூறும் எண்வகை மெய்ப்பாடுகள் காப்பியத்தில் சிறப்பாக இடம் பெற்றுள்ளன.

**நகை**

நகை தோன்றுவதற்குரிய நிலைக்களன்களாகத் தொல்காப்பியர், "எள்ளல், இளமை பேதைமை மடன்" (மெய்ப்-4) எனும் நான்கினைக் கூறுகின்றார். கம்பனில் எள்ளல் சுவை தோன்றும் நிலைக்களங்கள் தெளிவாகச் சுட்டப்பட்டுள்ளன. கோபுரத்தின் மேல் ஏறிக் குரங்குப் படையைக் காணும் இராவணனுக்கு சாரன் குரங்குப் படைத் தலைவர்களைக் காட்டி அவர்களது ஆற்றலை விவரித்துக் கூறுகின்றான். அதனைக் கேட்ட இராவணன்,

**சினம் கொல் திண் திறல் அரக்கனும் சிறுநகை செய்தான்**
**புனம் கொள் புன்தலைக் குரங்கினைப் புகழுதி போலாம்**
**வனங்களும் படர் வரைதொறும் திரிதரு மானின்**
**இனங்களும் பல என்செயும், அரியினை**

**(கம்ப-6894)**

எனக் கூறி நகைக்கின்றான்.

இராமனுக்காகத் தூது சென்ற அங்கதனைத் தன்னோடு சேர்த்துக்கொள்ள விரும்பிக் கிட்கிந்தை அரசை அவனுக்கு மீட்டுத் தருவேன் எனக் கூறுகின்றான். இதனைக் கேட்ட அங்கதன்,

**நாய் தரக் கொள்ளும் சீயம், நல் அரசு என்று நக்கான்**

**(தொல்.7002)**

என்கிறான். தொல்காப்பியர் கூறும் காரணங்களால் நகை பிறப்பதோடு அழுகையாலும், ஆனந்தத்தாலும், கோபத்தாலும், பெரு மித உயர்வாலும், வீரத்தாலும் நகை உணர்வு தோன்றுவதைக் காப்பியத்தில் காண முடிகின்றது. காட்டில் இருக்கும் இராமனை இல்லம் அழைத்துச் செல்ல வரும் பரதனின் சேனையைக் கண்ட குகனின் மனநிலையைக் கூறும் கம்பர்.

**தொகை முரண் சேனையைத் துகளின் நோக்குவான்**
**நகைமிகக் கண்கள் தீ நாற**

இருந்தான் என்கிறார். இங்குக் கோபத்தால் நகைவெளிப்படுகிறது. காப்பிய மாந்தர்களிடம் தோன்றிய நகையைக் காட்டிய கம்பர், காப்பியத்தைப் படிப்பவர்களுக்கும் நகைப்பை ஏற்படுத்துகின்றார். உள்ளத்தில் தோன்றிய எள்ளல் உணர்வு, நகையாய் புற உறுப்புகளால் வெளிப்படுவதைக் கம்பர் காட்டுகின்றார். கைகளைத் தட்டி, மார்பும் தோள்களும் குலுங்க நகைப்பதை,

**வாள் தடம் தவழ் ஆரமும் வயங்கு ஒளி மார்பும்**
**தோள் தடங்களும் குலுங்க நக்கு**

என்ற தொடர் மூலம் காட்சிப்படுத்துகின்றார்.

**அழுகை**

**இளிவே இழவே இசைவே வறுமை**

என்ற நான்கின் காரணமாக அழுகை தோன்றும் என்கிறார் தொல்காப்பியர். காப்பியத்தில் இழவு பற்றிய அழுகை மிகுதியும் உள்ளது. தசரதன் மறைவிற்காகக் கோசலை இராமன், பரதன், சடாபு

முதலானோர் வருந்துவதும் வாலியின் மறைவிற்காக அங்கதன், தாரை ஆகியோர் புலம்புவதும், இந்திரசித்து, கும்பகருணன் ஆகியோர் மறைவிற்காக இராவணன், மண்டோதரி, தான்யமாலி ஆகியோர் வருந்துவதும் அழுகை மெய்ப்பாட்டைத் தெளிவாக வெளிப்படுத்துகின்றன.

முதல் காட்சியிலேயே காதல்கொண்ட இராமனும் சீதையும் திருமணத்திற்கு முன் பிரிவால் வருந்துவதும், சீதையை எண்ணி இராமன் புலம்புவதும் (531 - 535) அசைவால் எழுந்த அழுகையாகக் கருதலாம். பிரம்மாத்திரத்தால் கட்டுண்டு கிடந்த இராம இலக்கு வரை விமானத்தில் இருந்து பார்த்த சீதை அவர்கள் இறந்தனரோ என ஐயுற்று அழுவதை,

**அடித்தாள் முலை மேல், வயிறு அலைத்தாள்**
**அழுதாள், தொழுதாள், அனல் வீழ்ந்த**
**கொடித்தான் என்ன, மெய் சுருண்டாள்**
**கொதித்தாள், பதைத்தாள், குலைவுற்றாள்.**

எனக் கூறுவது அழுகைக்குரிய சிறந்த எடுத்துக்காட்டாகும்.

மக்களின் அழுகையைக் காட்டிய கம்பர் அவலச் சுவையை மேலும் சிறப்பாகக் காட்டப் பிற உயிரினங்களின் அழுகையையும் காட்டுகிறார். இராமன் காடு செல்வதைக் கண்ட மக்கள் மட்டுமின்றி மற்ற உயிரினங்களும் அழுதன (1703) என்பதை எடுத்துக் காட்டுகின்றார்.

**இளிவரல்**

இளிவரல் என்னும் மெய்ப்பாடு மூப்பு பிணி வருத்தம் மென்மை (மெய்ப் - 6) என்ற நான்கு காரணங்களால் தோன்றும் என்கிறார் தொல்காப்பியர். தசரதன் பல்லாண்டுகள் வாழ்ந்தும் குழந்தைகள் இல்லாமல் வருந்துவதும், போர்க்களத்தில் இறக்காமலும் மூப்பு அடைந்த பின்னரும் துறவாத வாழ்வை எண்ணித் தசரதன் மனச்சோர்வு அடைந்து தன் நிலைக்கு இரங்கிப் பேசுவதை,

**விரும்பிய மூப்பு எனும் வீடு கண்ட யான்**
***(1328)***

இளிவரல் எனக் குறிப்பிடும் கம்பர் மூப்பால் விளைந்த மெய்ப்பாட்டைக் காட்டுகின்றார்.

அறிவும், ஆற்றலும் பெற்ற எல்லா அரசர்களையும் வென்ற தனக்கு, மிகவும் நேசித்த தன் மனைவியாலேயே முடிவும் பழியும் ஏற்பட்டதாக,

**எண்ணா நின்றாய் யாரையும், எல்லர் இகலாலும்,**
**விண்ணோர் காறும்வென்ற எனக்கு, என் மனை வாழும்**
**பெண்ணால் வந்தது, அந்தரம் என்னப் பெறுவேனோ?**
***(க.1534)***

எனக் கூறி வருந்தவது இளிவரல் மெய்ப்பாடாகும். முதல் போரில் இராவணனை, இராமன் இன்று போய் நாளைவா எனக் கூறியதும் அவன் இலங்கைக்கு மீளும் நிலையைக் காட்டும் கம்பர். உலகையும், நகரையும், மக்களையும், சேனையையும் பார்க்காமல் பெண்கள் எல்லாம் அவனைப் பார்க்க அவன் தலை கவிழ்ந்து நிலத்தையே பார்த்தச் சென்றான் (7274) எனக் கூறுமிடத்தில் அவனது இளிவரல் தன்மை சிறப்பாகப் புலப்படுகிறது.

**மருட்கை**

தொல்காப்பியர் மருட்கை எனும் மெய்ப்பாடு தோன்றுவதற்குரிய களங்களாக புதுமை பெருமை சிறுமை ஆக்கல் (மெய்ப் - 7) என்ற நான்கினைக் கூறுகின்றார். இராமனது புதுமையான அழகு கண்டு வியக்கும் பெண்களின் நிலையைக் கம்பர்,

**தோள் கண்டார் தோளே கண்டார்,**
**தொடு கழல்கலம் அன்ன**

**தாள் கண்டார் தாளே கண்டார் தடக்கை கண்டாரும் அஃதே**

***(1081)***

என்கிறார். இராமனின் அழகைக் கண்டு சூர்ப்பணகை வியப்பதும் சூர்ப்பணகை வியப்பதும் சூர்ப்பனகையில் வாயிலாகச் சீதையின் அழகைக் கேள்வியுற்ற இராவணன் முதல் முதலில் சீதையின் அழகைக்கண்டு வியப்பதும், புதுமையினால் எற்பட்ட வியப்பு எனலாம். கடல் கடந்து வந்த அனுமனைக் கண்ட சீதை,

**இத்துணைச் சிறியதோர் ஏணில் யாக்கையை, தத்தினை கடல், அது தவத்தின் ஆயதோ? சித்தியின் இயன்றதோ? செப்புவாய் என்றாள்.**

என வியப்பது சிறுமை. ஆக்கம் முதலியவற்றால் ஏற்பட்ட மருட்கையாக அமைகிறது.இலங்கையை அனுமன் கண்டு அதன் வளத்தையும் அரக்கா் வாழ்வையும் பெரிதும் வியப்பது (4841 - 4855) ஆக் கத்தால் விளையும் மருட்கையாகும்.

**அச்சம்**

அணங்கு விலங்கு கள்வர் தம்இறை (மெய் - 8) என்ற நான்கினை அச்சம் தோன்றுவதற்குரிய களங்களாகச் சுட்டுகிறார் தொல்காப்பியர். தொல்காப்பியர் சுட்டும் அச்சத்திற்குரிய களங்கள் காப்பியத்தில் மிகுதியாக இடம் பெறவில்லை என்றாலும் கதை நிகழ்ச்சிகளின் வாயிலாக தோன்றும் அச்ச உணர்வு இடம் பெற்றிருக்கின்றது. தசரதன் இறக்கவும், இராமன் காட்டிற்குச் செல்லவும் கைகேயி பெற்ற வரங்களே காரணம் என அறிந்த பரதன் சினம்கொள்ள அதைனைக் கண்டோரது அச்சத்தைக் கம்பர்,

**அஞ்சினர் வானவர், அவுணர், அச்சத்தால் துஞ்சினர் எனைப்பலர்,.**

என்கிறார்.

தவ உருவத்தில் வந்த இராவணனைக் கண்ட உயிரினங்களின் அச்சத்தையும் (3353), போர்க்களத்தில் பகைவர் ஆற்றலுக்கு ஆற்றாது ஓடும் குரங்குகளின் அச்சத்தைக் கம்பர்,

**..ண்டன நடுக்கம், வாய்கள் புலர்ந்தன, மயிரும் பொங்க,**
**மாண்டனம் அன்றோ? என்ற - வானரம் எவையும் மாதோ**

***(8455)***

என்றும் பாடியுள்ளார். அனுமன் ஆற்றலுக்கு ஆற்றாது ஓடும் அரக்கரது அச்சமும், இலங்கையில் எழுந்த தீயினுக்கு அஞ்சிய பெண்களின் அச்சமும் காப்பியத்தில் சிறப்பாக இடம் பெற்றுள்ளன.

**பெருமிதம்**

கல்வி தறுகண் இசைமை கொடை (மெய்ப் - 9) எனத் தொல்காப்பியர் பெருமித மெய்ப்பாடு நான்கு நிலைகளில் தோன்றும் என்கிறார். தசரதனின் பெருமிதம் வாழ்வை.

**ஈந்தே கடந்தான், இரப்போர் எண் இல்நுண்நூல்**
**ஆய்ந்தே கடந்தான், அறிவு என்னும் அளக்கர், வாளால்**

**காய்ந்தே கடந்தான், பகைவேலை, கருத்து முற்றத்**
**தோய்ந்தே கடந்தான், திருவின் தொடர்போக பௌவம்**

எனக் கம்பர் காட்டுகிறார். இதில் கொடை, கல்வி, வீரத்தால் விளைந்த புகழ், செல்வத்தால் அடைந்த பெருமித வாழ்வு புலனாகிறது.அயோத்தி நகர மக்களது பெருமித வாழ்வு.

**வண்மை இல்லை, ஓர் வறுமை இன்மையால்,**
**திண்மை இல்லை, நேர் செறுநர் இன்மையால்**

எனும் பாடலில் வெளிப்படுகின்றது. இராமன், இலக்குவன், இராவணன், இந்திரசித்து, கும்பகருணன், அதிகாயன் போன்றவர்களின் வீரத்தால் விளைந்த மெய்ப்பாடு காப்பியத்தில் நிறைந்துள்ளதைக் காண முடிகின்றது.

**வெகுளி**

தொல்காப்பியர் வெகுளி தோன்றுவதற்குரிய காரணங்களாக உறுப்பறை, குடிகோள், அலை, கொலை (மெய் - 10) என்ற நான்கைச் சுட்டுகிறார். பிறரால் தன் உறுப்புக்கள் சிதைக்கப்படும்பொழுது வெகுளி தோன்றும். சூர்ப்பணகையின் உறுப்புக்களை இலக்குவன் சிதைத்தது இராம-இராவணப் போக்குக் காரணமாக அமைந்தது. தன் குடிமக்களும் சுற்றமும் மாற்றாரால் துன்புறுத்தப்படும்பொழுது வெகுளி தோன்றும் நிலைக்குச் சான்றாக, இராவணன் தேவர்களைக் கையகப்படுத்தி அவர்களுக்குத் தீங்கிழைக்கிறான். தன் குடியாகிய தேவர்களைக் காப்பதற்காக இராமன் தோன்றுவதைக் கூறலாம்.

இலங்கைப் போரின் ஒவ்வொரு நிலைக்கும் கொலையே காரணமாக அமைகிறது. இறுதியாக இராவணன் சினந்தெழுந்து போர்க்களம் வருவதற்கு இந்திரசித்துவின் கொலையே காரணமாக அமைகிறது. கூனியின் சினம்,

> **தெழித்தனள் உரப்பினள், சிறுகண் தீ உக**
> **விழித்தனள், வைதனள், வெய்து உயிர்த்தனள்,**
> **அழித்தனள், அழுதனள், அம்பொன் மாலையால்**
> **குழித்தனள் நிலத்தை - அக்கொடிய கூனியே**

எனச் சிறப்பாகக் காட்டப்படுகிறது. வெகுளி மெய்ப்பாட்டைக் காப்பியத்தின் பல இடங்களில் காண முடிகின்றது.

**உவகை**

செல்வம் புலன் புணர்வு விளையாட்டு (மெய்ப்.11) என உவகை தோன்றுவதற்குரிய காரணங்களைச் சுட்டுகிறார் தொல்காப்பியர். அரசுரிமையை இராமன் பெறவிருக்கிறான் என்ற செய்தி கேட்டுத் தேவர்களும், அயோத்தி நகர மக்களும் மகிழ்ந்த செய்தியையும் (1435 - 1444), அரசுரிமையை மீட்டுத் தருவதாகக் கூறியதும் சுக்கிரீவன்,

> **எழுந்து பேர் உவகைக் கடற் பெருந்திரை இரைக்க**
> **அழுந்து துன்பினுக்கு அக்கரை கண்டனன் அனையான் (க.3856)**

என மகிழ்ந்ததும், வீடணன் அரசு பெற இராமன் முதலானோர் பெற்ற மகிழ்ச்சியும் (9952 - 9961) செல்வத்தால் ஏற்பட்ட உவகையாகக் கூறலாம். சீதையைக் கண்ட அனுமனது மகிழ்ச்சி,

> **ஆடினான், பாடினான், ஆண்டும் ஈண்டும் பாய்ந்து**
> **ஓடினன், உலாவினன் - உவகைத்தேன் உண்டான்**

என்று காட்டப்படுவதும், சீதையின் சூடாமணி பெற்ற இராமன் மகிழ்ச்சியடைவதும் (6054) உவகை மெய்ப்பாட்டுக்குரிய சிறந்த சான்றுகளாகும்.

**கம்பரின் தனித்துவம்**

ஒரே நேரத்தில் பல்வேறு உணர்வுகளுக்கு உட்படும் மனிதர்களிடம் பல்வேறுபட்ட மெய்ப்பாடுகள் தோன்றும், காப்பியத்தில் கதை நிகழ்ச்சிகளுக்கு ஏற்பக் கதை மாந்தர்களிடம் பல மெய்ப்பாடுகள் ஒரே நேரத்தில் தோன்றுமாறு கம்பர் அமைத்திருக்கிறார். போரில் மரணம் அடைந்த இந்திரசித்தின் உடலைக் கண்ட இராவணனின் நிலையைக் காட்டும் கம்பர்,

> **திருகுவெஞ் சினத்தீநிகர் சீற்றமும்,**
> **..**
> **உருகு செம்பு என ஓடியது ஊற்று நீர்**

என்கிறார். இப்பாடலில் வெகுளியும், அழுகையும் ஒரு சேர இடம் பெற்றிருப்பதைக் காணமுடிகின்றது. உணவிற்கேற்ப மெய்யின் கண் தோன்றும் மெய்ப்பாடுகளைக் கம்பர் தருமிடங்கள் சிறப்பானவைகள் உண்டவர்களின் நிலையைக் கம்பர்,

> **உள்ளுடை மயக்கால் உண் கண் சிவந்து வாய் வெண்மை ஊறி**
> **துள்ளிடைப் புருவம் கோட்டித் துடிப்ப வேர் பொடிப்ப**

*உளறுவர் என்கிறார். இதைப் போலவே கள்ளுண்ட பெண்களின் மெய்ப்பாடுகள் உணர்வுகளை (8824 - 8828) விரிவாக எடுத்துக் காட்டுகின்றார்.*

## *முடிவுரை*

*கம்பனில் தொல்காப்பியரின் மெய்ப்பாட்டுக் கொள்கை நேரடியாகவும், நுணுக்கமாகவும் இடம் பெற்றுள்ளன. தொல்காப்பியர் மெய்ப்பாடு தோன்றுவதற்கான காரணங்களைத் தொகுத்துக் காட்டுகின்றார். கம்பர் கதை மாந்தர்களின் உணர்வுகளால் உடல் உறுப்புகளால் வெளிப்படும் தன்மைகளைச் சிறப்பாக அமைத்துக் காட்டுகிறார். தொல்காப்பியர் சுட்டும் எண்வகை மெய்ப்பாடுகளுக்கும், களங்களுக்கும் ஏற்றந்தரும் வகையில் கம்பராமாயணப் பாடல்கள் அமைந்திருப்பதும், ஒரேநேரத்தில் பல மெய்ப்பாடுகள் தோன்றும் நிலைகளையும் அறிய முடிகின்றது.*

## துணை நூற்பட்டியல்


1. இளம்பூரணன். (2007). தொல்காப்பியம் -மெய்ப்பாட்டியல், உவமையியல், செய்யுளியல், மரபியல், சென்னை, கழக வெளியீடு
2. ரா. வே. சேதுப்பிள்ளை. (2004). *கம்பர் கவி இன்பம்*, தொகுதி - 2, இராஜபாளையம்.
3. தமிழண்ணல், *தொல்காப்பியம் மூலமும் கருத்துரையும்*. மதுரை, மீனாட்சி புத்தகநிலையம்.
4. ஆச்சார்யா, பி.எஸ். *வால்மீகி இராமாயணம்*, சென்னை, நர்மதா பதிப்பகம்.
5. வை.மு. கோபால கிருஷ்ணமாச்சாரியர், (1957). *கம்பராமாயணம்*. சென்னை, மூன்றாம் பதிப்பு.